# நீர்வள ஆதாரத்துறை

## முன்னுரை:

வேளாண்மை சார்ந்த தமிழ்நாட்டைப் போன்ற மாநிலத்தில் வேளாண் உற்பத்தித் திறனையும் வருமானத்தையும் அதிகப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்வது அவசியமாகும். வேளாண்மையின் வளர்ச்சியானது நீரினைப் பயன்படுத்துதல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதைச் சார்ந்து உள்ளது. இதனை அடைந்திட, பாசன மேலாண்மை மற்றும் வேளாண் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு எளிதாகக் கிடைத்திடும் வகையில் நீர்வள அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளை ஒருங்கிணைத்தல் அவசியமாகிறது.

இந்தியாவில் உள்ள வறட்சி மிகுந்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இங்கு ஆண்டிற்கு 925 மில்லி மீட்டர் அளவே மழை கிடைக்கிறது. தமிழ்நாட்டின் மக்கள் தொகை சுமார் 62 மில்லியன் ஆகும். இந்திய அளவில் சராசரியாக ஒரு நபருக்குக் கிடைக்கும் நீர் அளவான 2200 கன மீட்டருடன் ஒப்பிடுகையில், தமிழகத்தில் தனி நபருக்குக் கிடைக்கும் நீர் அளவானது ஆண்டிற்கு 900 கன மீட்டர் அளவேயாகும். தமிழ்நாட்டைப் பூகோள ரீதியில் 17 ஆற்றுப்படுகைகளாகப் பிரிக்கலாம் (127 உபவடி நிலங்கள்). அவற்றில் பெரும்பாலானவை நீர் பற்றாக்குறையுடன் உள்ளவை. இம்மாநிலத்தில் 70 பெரிய நீர்த்தேக்கங்கள், சுமார் 40,000 ஏரிகள் மற்றும் சுமார் 30 இலட்சம் கிணறுகள் உள்ளன. இவைகளில் அதிகப்படியாக பெறப்படும் மழைநீர் சேகரிக்கப்படுகிறது. மாநிலத்தில் அதிகப்படியாக 75 சதவீதம் நீர் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படுகிறது. 30 லட்சம் ஹெக்டேர் பாசனப்பரப்பில் 30 சதவீதம் கால்வாய் பாசனம் மூலமாகவும், 21 சதவீதம் ஏரிப்பாசனம் மூலமாகவும் , 49 சதவீதம் கிணறுகள் மூலமாகவும் பாசனம் பெறுகின்றன.

பாசன நிலங்களுக்கு ஆதாரமாக உள்ள பாசன உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்துதல் மற்றும் சீரமைத்தல் மிகவும் அவசியம். பாசன கால்வாய் அமைப்புகளைப் புனரமைத்து அவைகளை பழைய நிலைக்குக் கொண்டு வருதல் மற்றும் குளங்களைப் புதுப்பித்தல் இதில் அடங்கும்.

இந்த நோக்கத்துடன், சம்மந்தப்பட்ட அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து, நீர்வள நிலவளத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உபவடி நில கட்டமைப்பு முறையில், ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மை மூலம் பாசன சேவை மற்றும் பாசன வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## இத்திட்டத்தின் நோக்கங்கள்:

- நவீன நீர் சேமிப்புப் பாசன தொழில் நுட்பங்கள் பயன்படுத்துதல் உள்ளிட்ட பாசன சேவை முறையை மேம்படுத்துதல்.
- நீர் பயனீட்டாளர்கள் சங்கம் அமைத்தல் மற்றும் நீர்வள மேலாண்மையில் விவசாயிகளை ஈடுபடுத்துதல்.

## திட்ட மேம்பாட்டு நோக்கம்:

- 63 உபவடி நிலங்களில் பாசன முறையை புனரமைத்து மற்றும் நவீன படுத்தி பாசன நிலங்களை அதிகப்படுத்துவதில் முதலா வது ஆண்டில் 9 உபவடிநிலங்களிலும் இரண்டாவது ஆண்டில் 16 உபவடிநிலங்க ளிலும் மூன்றாவது ஆண்டில் 30 உபவடிநிலங்களிலும் நான்காம் ஆண்டு மீதமுள்ள 8 உபவடிநிலங்களிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இத்திட்டம் 6 ஆண்டுகளில் அனைத்து பணிகளும் செய்து முடிக்கப்படும்.
- விவசாய உற்பத்தி திறனை அதிகரித்த (ஒரு அலகு நீர் பயன்பாட்டில் கிடைக்கும் நிகர இலாபம்) அதாவது ஒரு கியூபிக் மீட்டருக்கு கிடைக்கும் நிகர இலாபம் குறிப்பிட்ட பயனாளிகளின் வருமானத்தை அதிகரித்தல்.
- SWaRMA மூன்று உபவடிநில வாரியங்கள் மற்றும் ஒரு வடிநில மேம்பாட்டு மேலாண்மை வாரியங்கள் ஆகியவற்றை இத்திட்ட இறுதிக்குள் தீர்மானித்தல்.
- இந்த மூன்று உபவடிநிலங்கள் மற்றும் ஒரு வடி நிலத்தில் முன்மாதிரியாக நிலையாக நீர் ஆதார மேலாண்மைக்கு வழிவகுக்க தேவையான நல்ல நடைமுறைகள் மற்றும் முடிவெடுப்பதன் காலமுறையை மேம்படுத்துதல்.
- சிறந்த சந்தை வாய்ப்புகள் மூலமாக விவசாயத் தில் இலாபகரமாக வருமானத்தை உறுதி செய்தல்.
- நவின யுக்திகளை பயன்படுத்தி அதிக மீன் உற்பத்தி செய்தல் விவசாயத்தில் கால்நடை களின் வளர்ச்சியை அதிகரித்தல் வருமானத்தை அதிகரித்தல்.

## திட்டக் கூறுகள்

### கூறு அ : 1673 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உபவடிநிலங்கள் அளவில் பாசன நிலைகள் நவீனப்படுத்துதல்

63 உபவடிநிலங்களில் பாசன நிலைகளை நவீனம் ஆக்குதல் மற்றும் தகுந்த முறையில் நீரினை பகிர்ந்தளித்தல் மற்றும் உயர் மேலாண்மை வழியாக அதிக அளவிளான நீரினை பாசன நிலைகளுக்கு பகிர்ந்தளித்தல். இதன் கீழ் இரண்டு கூறுகள் மூலமாக செயல்ப்படுத்தபடுகின்றன.

### உப கூறு அ 1: ஏரிகள் நிலையை நவீனப்படுத்துதல்

#### குறிக்கோள்

பாசன சேவையை மேம்படுத்தவும், நீர் ஆதாரங்களை திறமையாக கையாளும் விதத்தில் பாசன நிலைகளில் உற்பத்தி திறனை மேம்படுத்தவும் தமிழ்நாட்டில் உள்ள 63 உபவடிநிலங்களில் இத்திட்டம் செயல்ப்படுத்தப்பட உள்ளது.

மாநிலத்தில் உள்ள பழமையான நீர்நிலைகளுக்கு புத்துயிர் அளித்து அவைகனை மேம்படுத்துதல். விவசாயிகளுக்கு அதிக அளவிளான பயன்கள் கிடைக்கப்பெறும் வகையில் பல்முனை திட்ட அணுகுமுறையின் மூலம் இந்த நீர்நிலைகளை மேம்படுத்த சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்படும்.

**உப கூறு அ 2 :** பிற பாசன நிலைகளை நவீனமாக்குதல், ஏரிகள் இல்லாத இடங்களில் கால்வாய் பாசன நிலைகளை (பரம்பிகுளம் ஆளியார் திட்டம்) மேம்படுத்த தனி கவனம் செலுத்தப்படும். இப்பாசன நிலைகளையும் உப வடிநிலங்கள் அடிப்படையில் நவீனப்படுத்தப்படும்.

**கூறு இ :** ரூ. 748 கோடி மதிப்பீட்டில் பயிர் சாகுபடி தீவிரப்படுத்துதல் மற்றும் மாற்று பயிர் செய்தல்.

### உப கூறு இ 1: ஏரி நிலைகள்

ஏரிகளை சார்ந்த பாசன நிலங்களில் பயிர் சாகுபடியை தீவிரப்படுத்துதல் மற்றும் மாற்று பயிர் செய்தலில் கவனம் செலுத்துதல்.

**உப கூறு இ 2 :** பிற நிலைகள் அதிக அளவிலான கால்வாய் பாசன நிலைகளில் பயன்பெறும் நிலங்களில் பயிர் சாகுபடியை தீவிரப்படுத்துதல் மற்றும் மாற்று பயிர் செய்ய கவனம் செலுத்தப்படும்.

கூறு உ : ரூ. 237 கோடி மதிப்பீட்டில் பாசன விவசாயத்திற்கான நிறுவனங்களை நவீனப்படுத்துதல்.

பாசன சேவை நீர் சரியாக பகிர்ந்தளிப்பு நவீன முறையில் திறமையா ன முறையில் பகிர்ந்தளித்ததற்கான நிறுவனங்களில் திறமை யை மேம்படுத்துதலில் கவனம் செலுத்தப்படும். இச்செயலானது மாநில அளவில் மேற்கொள்ளப்படும். இச்செயல்கள் நீர் ஆதார துறை மற்றும் நீர் பயனா ளிகள் சங்கங்கள் வாயிலாக செயல் படுத்தப்படும். இச்செயல்கள் நீர் ஆதார துறை அளவில் நிறுவன திறமையை மேம்படுத்த உதவும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. நீர் நிலைக ளின் வடிவமைப்பு கண்காணித்தல், பராமரிப்பு மற்றும் நவீனமாக்குதல், சுற்றுசூழல் மற்றும் சமுக அளவில் நிலையான வளர்ச்சிக்கு தேவையான தற்காலத்திற்கேற்ப உகந்த தொழிட்நுட்பங்களை செயல்ப்படுத்தி, சிறப்பாக செயல்படும் நீர் பயனீட்டாளர் சங்கங்க ளை கலந்து ஆலோசித்து இப்பணிகள் செயல்படுத்தப்படும்.

கூறு எ : நீர் ஆதார மேலாண்மை (ரூ. 22.50 கோடி மதிப்பீட்டில்) மாநிலத்திலுள்ள நீர் ஆதாரங்களை மேம்படுத்த நிறுவனங்களை சீரமைத்தல் மற்றும் திறமையை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தற்போழுதுள்ள IWS மற்றும் மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் ஆதார விவர குறிப்பு மையம் ஆகிய இரண்டயும் இணைத்து மாநில நீர் ஆதார மேலாண்மை குழு (SWaRMA) என்ற நிறுவனத்தை உருவாக்குவதும் இதில் அடங்கும். இத்திட்ட பணிகள் நீர் ஆதார துறை மற்றும் வடிநில வாரியம் மூலம் செயல்ப்படுத்தப்படும். நீர் ஆதாரங்களை திட்டமிடுதல் மற்றும் மேன்மைப்படுத்துதலில் இப்பணிகள் வழியாக தமிழ்நாட்டை இந்தியாவில் ஒரு முன் உதாரணமாக ஆக்கிவிடலாம்.

கூறு ஒ : (ரூ. 35.50 கோடி மதிப்பீட்டில் திட்ட மேலாண்மை செயலாக்கம்) இத்திட்டத்தில் உள்ள அனைத்து பணிகளை மேம்படுத்த ல் மற்றும் ஒருகிணைத்தல் இதில் அடங்கும். இப்பணிகள் பல்முனை திட்ட குழுவுடன் செயல்ப்படுத்தப்படும். நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு பணிகள், திட்ட பணிகளின் நிலைகள், தேவையான திருத்தங்கள் ஆகியவற்றை பல்முனை திட்ட பிரிவு மேற்கொள்ளும்.

## திட்ட செயலாக்க நிலை

இத்திட்டம் ஆறு ஆண்டுகளில் செயலாக்கப்படும். நீர்வள ஆதாரத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், வேளாண் விற்பனைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் மீன்வளத் துறைகளுடன் பல்முனை திட்ட பிரிவு இணைந்த மேலாண்மை மற்றும் ஒருங்கிணைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 2547 கோடி (US 566 Million) ஆகும். (அதாவது ஒரு அமெரிக்க டாலருக்கு ரூ. 45.00 என்ற மதிப்பின்படி) இதில் ரூ. 2153.00 கோடி ( US 455 Million) உலக வங்கி திரும்ப அளிக்கவுள்ளது. 11.12.2006 முதல் 13.12.2006 வரை வாஷிங்டனில் உள்ள உலக வங்கியில் இத்திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. உலக வங்கி 566.00 US Million டாலர் மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ஒப்புத்தல் அளித்தது. அதில் US 485 Million கடனாகவும் US 150 Million IDA யாகவும் அளிக்கப்படும். இதில் 75 US Million Dollar மத்திய அரசின் RRR உப திட்டமாக எடுத்தக்கொள்ளப்படும். இத்தொகை சில குறிப்பிட்ட உபவடிநிலங்களில் உள்ள பொதுப்பணித்துறையின் கண்மாய்களை புனரமைக்க பயன்படுத்தப்படும். 12.2.2007 அன்று புதுடில்லியில் மத்திய அரசு அலுவலர்கள், மாநில அரசு அலுவலர்கள் மற்றும் உலக வங்கி அலுவலர்கள் இத்திட்டத்திற்கான சட்ட உடன்பாடுகளில் கையெழுத்திட்டனர். இத்திட்டம் 9.4.2007 முதல் செயல்படுத்தப்படும்.

நீர்வள ஆதார துறை பொறுத்தமட்டில் 9 உபவடிநிலங்களில் 71 பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் 69 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. பரம்பிகுளம் ஆளியார் திட்டத்தின் கீழ் இரண்டு பணிகளுக்கு வல்லுனர்களை கலந்து மறு திருத்திய வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

9 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் அளிக்கும் குழு (TAC) ஒப்புதல் அளித்துள்ளது. 31.8.2007 நாளிட்ட கடிதத்தில் உலக வங்கி வராகநதி உபவடிநிலத்தில் உள்ள 3 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்க தடையில்லா சான்றிதழ் வழங்கியது. நீர்வள ஆதார பணிகளை பொறுத்த மட்டில் பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளி வழங்கும் போது இது ஒரு முன்மாதிரியாக எடுத்துகொள்ளப்படும்.

## நீர் ஆதார மேலாண்மை (அடிப்படை மதிப்பீடு ரூ. 22.50 கோடி)

மாநிலத்தின் நிலையான நீர் ஆதார மேலாண்மைக்கு நிறுவன அமைப்புகள் மற்றும் பயிற்சி ஆகியவற்றை மேம்படுத்துதல் இதன் நோக்கமாகும். மாநில நீர் ஆதார மேலாண்மை அதிகார அமைப்பை (SWaRMA) ஏற்படுத்துதல், தற்பொழுதுள்ள நீர் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் ஆதார விவர மையம் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல் இதில் அடங்கும்.

இப்பணிகளை SWaRMA அமைப்பு ஏற்படுத்தும் வரை தற்பொழுதுள்ள நிறுவனங்கள் செயல்படுத்தும். நீர் ஆதாரத்துறை மற்றும் வடிநில குழுமம் ஆகியவை இப்பபணிகளை செயல்படுத்தும் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதால் நவீன முறையில் நிலையான நீர் ஆதாரத்திற்கு திட்டமிடுதல் மற்றும் நிர்வகித்தல் இந்தியாவிலேயே தமிழ்நாடு சிறந்த உதாரணமாக திகழும்.

## தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

| வ. எண். | பெயர் மற்றும் அலுவலக முகவரி | தொலைபேசி எண். மற்றும் FAX எண். | மின் அஞ்சல் |
|---|---|---|---|
| 1 | அரசு செயலாளர்,<br>பொதுப்பணித்துறை,<br>புனித ஜார்ஜ் கோட்டை ,<br>சென்னை – 600 009. | 25671622 | pwdsec@tn.gov.in<br><br>secypwd@yahoo.co.in |
| 2 | அரசு செயலாளர்,<br>வேளாண்மைத்துறை,<br>புனித ஜார்ஜ் கோட்டை ,<br>சென்னை – 600 009. | 25674482 | agrisec@sec.tn.gov.in |
| 3 | அரசு செயலாளர்,<br>கால்நடை பராமரிப்பு மற்றும்<br>மீன்வளத் துறை,<br>புனித ஜார்ஜ் கோட்டை ,<br>சென்னை – 600 009. | 25672937 | ahsec@sec.tn.gov.in |
| 4 | இயக்குனர்,<br>தோட்டக்ககலை மற்றும்<br>மலைபயிர்கள் துறை,<br>சேப்பாக்கம், சென்னை—5 | 28524643 | dirhorti@md4.vsnl.ent.in |
| 5 | ஆணையாளர், வேளாண்மை<br>சேப்பாக்கம், சென்னை—5 | 28524894, 28583323 | diragri@tn.nic.in |
| 6 | இயக்குனர்,<br>வேளாண் வணிக மற்றும்<br>வேளாண்மை தொழில்<br>திரு.வி.க.தொழில்நுட்ப<br>கிண்டி, சென்னை—32 | Fax: 22252754<br>Ph: 22253884,<br>22253885 | agrimarkbusiness@rediffmail.com |

| | | | |
|---|---|---|---|
| 7 | இயக்குனர்,<br>நீர் தொழில்நுட்ப மையம்,<br>தமிழ்நாடு வேளாண்மை<br>பல்கலை கழகம்,<br>கோயம்புத்தூர்–641 003 | Ph : 0422-6611278<br>Fax: 6611478 | directorwtc@tnau.ac.in |
| 8 | தலைமை அதிகாரி,<br>தமிழ்நாடு மின்சார வாரியம்,<br>அண்ணாசாலை, சென்னை–<br>600 002. | 28521300 | chairman@tnebnet.org |
| 9 | தலைமைப்பொறியாளர், வேளாண்மை<br>பொறியியல் துறை, 487, அண்ணா<br>சாலை, நந்தனம், சென்னை– 600 035. | 24350154 | aedce@tn.nic.in |
| 10 | சிறப்பு ஆணையாளர்,<br>மீன்வளத்துறை<br>டி.எம்.எஸ். வளாகம்,<br>தேனாம்பேட்டை, சென்னை–<br>600 006 | 24320791 | tnfisheries@.nic.in |
| 11 | இயக்குனர் மற்றும்<br>ஆணையாளர்,<br>டி.எம்.எஸ். வளாகம்,<br>தேனாம்பேட்டை, சென்னை–<br>600 006 | 24338714 | anh@tn.nic.in |
| 12 | தலைமைப்பொறியாளர்,<br>பொ.ப.து.,<br>மாநில நில மற்றும் நீர்வள விவர<br>குறிப்பு மையம்,<br>தரமணி,<br>சென்னை–600 113. | 22541368 | cegwch@dataone.in |
| 13 | தலைமைப்பொறியாளர் மற்றும்<br>இயக்குனர், பொ.ப.து.<br>நீரியல் ஆய்வு நிறுவனம்<br>தரமணி, சென்னை–600113. | 22542380 | ceiwgwrd@gmail.com |
| 14 | முதன்மை தலைமைப்<br>பொறியாளர் மற்றும் தலைமைப்<br>பொறியாளர், பொ.ப.து., (பொது),<br>சேப்பாக்கம், சென்னை–5 | 28410402 | eicmiswro@vnsl.net |
| 15 | தலைமைப் பொறியாளர்,<br>பொ.ப.து., நீ.ஆ.அ., சென்னை<br>மண்டலம், சேப்பாக்கம்,<br>சென்னை–5 | 28523007 | cecrwropwd@yahoo.co.in |
| 16 | தலைமைப்பொறியாளர்,<br>பொ.ப.து., நீ.ஆ.அ.,<br>திட்ட உருவாக்கம்,<br>சேப்பாக்கம், சென்னை–5 | 28525662 | Ceplanformulation@gmail.<br>com<br>Cepf2007@yahoo.co.in |
| 17 | தலைமைப்பொறியாளர்,<br>பொ.ப.து., நீ.ஆ.அ.,<br>வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும்<br>கட்டுமான ஆதாரம்,<br>சேப்பாக்கம், சென்னை–5 | 28413381 | cedrcs@vsnl.net |

| | | | |
|---|---|---|---|
| 18 | தலைமைப்பொறியாளர்,<br>பொ.ப.து., நீ.ஆ.அ.,<br>வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் நிர்மான உதவி மையம்,<br>சேப்பாக்கம், சென்னை–5 | 28415557 | ceomwro@vsnl.net |
| 19 | தலைமைப்பொறியாளர்,<br>பொ.ப.து., நீ.ஆ.அ.,<br>திருச்சி மண்டலம்,<br>திருச்சி–62020 | 0431-2332287 | petrycauvery@hotmail.com |
| 20 | தலைமைப்பொறியாளர்,<br>பொ.ப.து., நீ.ஆ.அ.,<br>பொள்ளாச்சி மண்டலம்,<br>கோயம்புத்தூர்–641001 | 0422-2381804 | |
| 21 | தலைமைப்பொறியாளர்,<br>பொ.ப.து., நீ.ஆ.அ.,<br>மதுரை மண்டலம்,<br>மதுரை–625002. | 0452-2530826 | tewromdu@bsnl.in |
| 22 | தலைமைப்பொறியாளர் மற்றும் இயக்குனர்,<br>பொ.ப.து., நீ.ஆ.அ.,<br>பாசன மேளாண்மை பயிற்சி நிறுவனம், துவாக்குடி,<br>திருச்சி–620 015 | 0431-2500603 | tnimti1@dataone.in |

| | | | |
|---|---|---|---|
| கலிங்கலார் | நிஷபநதி | சிந்தபள்ளிஉப்போடை | செங்கோட்டையார் |
| ஆனைவாரியோடை | சின்னார் | அம்புலியார் | அக்னியார் |
| பென்னையார் கிருஷ்ணகிரி வரை | சுவேதாநதி | மேல் குண்டார் | தெற்கார் |
| மேல் வைகை | கவுண்டன்யாநதி | பொய்னி | வரட்டார்–நாகலார் |

## மாநில நீர் ஆதார மேலாண்மை முகமை (SWaRMA)

## உத்தேசிக்கப்பட்ட அமைப்பு முறை

### சுவர்மா தலைவரது அலுவலகம்

- தமிழ்நாட்டில் உள்ள நீர் ஆதாரங்களை திட்டமிடுதல் மற்றும் மேலாண்மை
- மாநில நீர் குழு மற்றும் சார்ந்த முகமைகளுடன் தொடர்பு கொள்ளுதல்

### நிர்வாக சேவை பிரிவு

- அலுவலக நிர்வாகம் மற்றும் நிதிநீர் பாகம்
- கொள்முதல்/இருப்பு/ ஆவணங்கள் பராமரிப்பு
- தொடர்புபடுத்துதல்

### பிறசேவை பிரிவு

மக்கள் தொடர்பு பயனீட்டாளர்கள் ஆலோசனை
நீர் ஆதார ஆராய்ச்சி நிதியை பயன்படுத்தல்
கூட்டாண்மை / பயிற்சி
இணையத்தளம்/ தகவல் பரிமாற்றம்

### நீர் ஆதார கண்காணிப்பு பிரிவு


தட்பவெட்ப நிலை கண்காணிப்பு, மேற்பரப்பு நீர் கண்காணிப்பு, நிலத்தடி நீர் கண்காணிப்பு, நீர் தன்மை கண்காணிப்பு, செயற்கை கோள் நீர்இயல் தொலை ஆராய்ச்சி, பிற முகமைகளுடன் புள்ளி விவரங்களை தொகுத்தல் மற்றும் தரம் மேலாண்மை மற்றும் ஆவணங்களை பெறுதல்.

### ஆதாரங்களை திட்டமிடுதல் மற்றும் மேலாண்மை பிரிவு

கொள்கைவாரியாக ஆதரவு (மாநில நீர் குழு கூட்டம், கொள்கை வரைவு) விளக்கம் அளித்தல், மாநிலங்களுள்ளான நீர் மற்றும் நிலத்தடிநீர் முறைபடுத்துதல் தகவல் மையம் (அடிப்படை தகவல்கள்/புவியியல் தகவல் (GIS) பகுத்தாய்ந்தல் / மாதிரி தயாரித்தல் முடிவு ஆதரவு / முறை தகவல் அளித்தல் / பகிர்ந்தளித்தல் ஆதார திட்டமிடுதல் மற்றும் மேலாண்மை நீரினை திட்டமிடுதல் மற்றும் பகிர்ந்தளித்தல், விதிகள், வடிநில மற்றும் உபவடிநில வாரியங்களுக்கு உதவுதல்.

பிற பணிகள்

- நீர் ஆதாரங்களை திட்டமிடுதல் மற்றும் மேலாண்மைக்கு தேவையான விவரங்களை சரியாக பயன்படுத்துதல்.
- நிலையான நீர் ஆதார மேலாண்மைக்கு சட்டமைப்புகளை வலுபடுத்துதல்.
- கூவம் உபவடிநிலத்தில் கிராம நகர ஒருங்கிணைப்பிற்கான ஆய்வு மேற்கொள்ளுதல்.
- நீர் ஆதார ஆராய்ச்சி நிதியினை பயன்படுத்தி ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்ளுதல்.


ஒருங்கிணைந்த உற்பத்தி திறன் அதிகரித்தல்
நீர்
கள நடைமுறைகள்
விற்பனை
வாழ்க்கைத் தொழில்
மற்றவை
நீர்வள ஆதாரத்துறை
வேளாண்மை பொறியியல்
தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம்
வேளாண்மை
தோட்டக்கலை
தகவல் தொழில் நுட்பம்
வேளாண் வணிகம்
கால்நடை பராமரிப்பு
மீன் வளர்ப்பு
கால்நடை பராமரிப்பு
மீன் வளர்ப்பு மேம்பாடு களப்பணி மற்றும் விற்பனை
விவசாயிகள் பங்குபெறும் நீர் மேலாண்மை மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்
விவசாயத்தில் திறமையை அதிகரித்தல் மற்றும் இயந்திரமயமாக் குதல்
களப்பணி மற்றும் தரமான விதைகள் மற்றும் உரங்கள் போதுமான அளவில் வைத்திருத்தல்
மாற்று பயிர்களை சாகுபடி செய்தல் தரமான விதைகள் செயற்கை மற்றும் துல்லிய வேளாண்மை.
விற்பனை அறிவுத்திறன் விலை மற்றும் வானிலையை முன்கூட்டியே அறிதல்
முந்தைய மற்றும் பின்னர் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் மதிப்பு கூடுதல் போக்குவரத்து பாதுகாத்தல் மற்றும் விற்பனைக்கு உதவுதல்
நீர்வள ஆதாரத் துறையில் சுழல் பிரிவு, சுற்றுசுழல் பாதுகாப்பு, சமூக சமன்பாட்டினை கண்டறிய பயிற்சி அளித்தல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
விதைகளில் தரம் மற்றும் புதிய தொழில் நுட்பங்கள்